**சென்னை-6, அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : முனைவர்.பொன்குமார்,**
M.A., M.Sc., MBA., M.Ed., M.Phil., M.Lis., Ph.D.,

**ந.க.எண். 039454/இ2-1/2019** **நாள். 29.04.2021**

**பொருள்.** பணியாளர் தொகுதி - அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை - 6 - திரு.மோ.ஆண்ரூஸ் ராஜன் என்பார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை.** 1.கிருஷ்ணகிரி அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் செயல்முறை ந.க.எண்.002836/அ1/2019, நாள்.04.03.2020.
2.அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யு.1) துறை, நாள்.26.02.2021.

--------

**ஆணை.**

பார்வை 1-ல் காணும் கிருஷ்ணகிரி அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் 10.03.2020 மு.ப. அன்று இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, தற்போது கிருஷ்ணகிரி அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் திரு.மோ.ஆண்ரூஸ் ராஜன் என்பாருக்கு, பார்வை 2-ல் காணும் அரசுக் கடிதத்தில், நியமன அலுவலருக்கு ஒருநிலை கூடுதல் அலுவலரால் துறை அளவிலேயே பணிவரன்முறை செய்திடலாம் என அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பின்வரும் அட்டவணை கலம் (4)ல் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இவர் தம் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவ காலத்தை மன நிறைவளிக்கும் வகையில் முடிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறார்.

அன்னாரது பணிவரன்முறை குறித்த பதிவுகள் அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன எனவும் சான்றளிக்கப்படுகிறது.

<u>அட்டவணை</u>

| **வ.எண்** கலம் (1) | **பெயர் மற்றும் பதவி திரு / திருமதி** கலம் (2) | **பணியேற்ற நாள்** கலம் (3) | **பணிவரன் முறை செய்யும் நாள்** கலம் (4) |
|---|---|---|---|
| 1. | திரு.மோ.ஆண்ரூஸ் ராஜன், இளநிலை உதவியாளர் | 10.03.2020 மு.ப | 10.03.2020 மு.ப |

29/4/2021

**இணை இயக்குநர் (பணியாளர்)**

**பெறுநர்**

திரு.மோ.ஆண்ரூஸ் ராஜன்,
இளநிலை உதவியாளர்,
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி - உரிய வழியாக

**நகல் :** அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், கிருஷ்ணகிரி - தனியருக்கு சார்வு செய்து அதன் விவரத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.